# சென்னைக்கு குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்கள் மற்றும் பாலாறு வடிநில வட்ட கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளின் நீரிருப்பு விவரங்கள்

வங்கக்கடலில் உருவாகி நேற்று (30.11.2024) கரையைக் கடந்த ஃபெஞ்சல் புயலினால் ஏற்பட்ட மழைப்பொழிவின் காரணமாக, இன்று (01.12.2024) காலை நிலவரப்படி சென்னைக்கு குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களின் மொத்த கொள்ளளவுகளில் (11.76 டிஎம்சி) 47% -இல் இருந்து 54% -ஆக (7%) உயர்ந்து, நேற்றைய மழையின் காரணமாக கூடுதலாக 750 மில்லியன் கனஅடி நீர் கிடைக்கப்பெற்று, தற்போது நீரிருப்பு 6.34 டிஎம்சி ஆக உள்ளது.

பாலாறு வடிநில கட்டுப்பாட்டின் கீழ், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களின் (KTCC) மொத்தம் உள்ள 1644 ஏரிகளில், நேற்றைய (30.11.2024) நிலவரப்படி 141 ஏரிகள் முழு கொள்ளளவை எட்டி இருந்த நிலையில், இன்று (01.12.2024) காலை நிலவரப்படி 277 ஏரிகள் முழு கொள்ளளவை எட்டியுள்ளன (136 ஏரிகள் கூடுதலாக முழு கொள்ளளவை எட்டியுள்ளன).

இங்ஙனம்

நீர்வளத்துறை